தாமஸ் பெயின்

அரசின் அடிப்படைத் தத்துவங்கள்

நவயுகப் பிரசுராலயம்

அரசின் அடிப்படைத் தத்துவங்கள்

அன்புடைய நண்பர்
நா. கணேசன் அவர்கட்கு
வே. சு. அருணாசலம்
5. 4. 47.

எழுதியவர்: தாமஸ் பெயின்

தமிழாக்கம்: வே. சு. அருணன்

நவயுகப் பிரசுராலயம்

காரைக்குடி :: சென்னை 5.

முதற்பதிப்பு: பிப்ரவரி 1947.

விலை அணா பத்து

THE B. N. PRESS, MADRAS.
for Navayuga Prachuralayam P. I. C. No. R. 63-A. 032247200.

பதிப்புரை

பதிப்பாளரின் கடமையாகக் கருதப்படுகின்ற ஒன்றிலிருந்த வழுவ மனமில்லை. எனவே ஓரிரு வார்த்தைகள்.....................

அரசின் அடிப்படைத் தத்துவங்களை விளக்கிக் கூறும் இச்சிறு புத்தகம் சுதந்திர இந்திய அரசியலமைப்பை வகுக்க முற்பட்டுள்ள இச்சமயத்தில் வெளி வருவது குறிப்பிடத் தகுந்ததும் உபயோகமானதும் ஆகும்.

ஆற்றலையும் அறிவையும் அடிப்படையாகக் கொண்டு வாக்குரிமை வழங்கப்படவேண்டுமா? அல்லது செல்வத்தைப் பொறுத்து வழங்கப்பட வேண்டுமா?..........இதுபோன்ற பிரச்னைகளை அலசி ஆராய்ந்துள்ளார் ஆசிரியர்.

சிறந்த இனிய நடையில் தமிழாக்கித் தந்துள்ள வே. சு. அருணன் அவர்களுக்கு எங்கள் நன்றி.

சென்னை
2—2—47.

டி. ஆர். அருணாசலம்,
நிர்வாகி.

முன்னுரை

'சுதந்திரம் உதயமாகப் போகிறது. இந்தியனே இந்தியனை அரசாள்வான்' என்று எதிர்நோக்கி நிற்கிறது இன்றைய இந்தியா. சுதந்திர அரசியலின் அடிப்படையான தத்துவங்கள் என்னவென்பதை இச்சமயத்தில் ஒவ்வோர் இந்தியனும் அறிய ஆசைப்படுவான். அமெரிக்காவின் சுதந்திரப் போராட்டத்தின் பொழுது எழுதப்பட்ட இக்கட்டுரைகள் இன்றைய இந்தியாவிற்கென்று எழுதப்பட்டவையே போன்று எதிரொலிக்கின்றன.

ராஜீயப் போக்கில் கட்சிகளுக்கிடையே அபிப்பிராய பேதங்கள் நிலவுவது சகஜம். அவற்றைக் களைந்தெறியும் மார்க்கங்களை வெளிப்படுத்துகிறது 'சமூகமும் அரசியலும்' என்னும் கட்டுரை. அது சர்ச்சைகளைத் தீர்த்து வைக்கும் மந்திரங்களை எடுத்துக் காட்டுகிறது; உயர்ந்த சுதந்திரப் பாதையை நமக்குச் சுட்டிக் காட்டுகிறது.

இக்கட்டுரைகள் கூறும் உண்மைகள் நிர்த்தாட்சண்யமானவை; என்றுமே அழியாதவை; மாறுபாட்டை அழிவிலும் காணுதவை. பொன்னெனப் போற்றத்தக்க இக்கட்டுரைகளை, சுதந்திர தாபம் கொண்ட தமிழ் மக்களுக்குப் புத்தக உருவில் அளிக்க முன்வந்த பெருமை 'நவயுகப் பிரசுராலயத்'தினரைச் சேரும். 'தமிழ் வளரட்டும்' என்பதே நம் ஆசை.

வே. சு. அருணன்

எங்கள் புதிய வெளியீடுகள்

ஸ்ரீமதி கிருஷ்ணாஹத்தீ ஸிங்

விதி என்ன செய்யும்? விலை ரூ. 4–8–0

(இரண்டாம் பதிப்பு)

இப்புத்தகம் நேரு குடும்பத்தின் கதையை தமிழ் மக்களுக்கு அளிக்கிறது.

ஆச்சார்ய கிருபளானி

சர்க்காவின் அரசியல் விலை ரூ. 2–0–0

இந்திய அரசியலில் முக்கிய ஸ்தானம் வகிக்கின்ற ஒன்றைப்பற்றி நமது ராஷ்ட்ரபதி விளக்கிக் கூறியிருக்கிறார்.

அரசின் அடிப்படைத் தத்துவங்கள்

அரசியலைப்போல் அதிகமான உற்சாகத்தை ஒவ்வொருவருக்கும் அளிக்கும் விஷயம் எதுவுமே கிடையாது. ஏழையானாலும் தனவந்தன் ஆனாலும், அவனது பாதுகாப்பும், பெருத்த அளவிலே அவன் முன்னேற்றமும், அத்துடனே சம்பந்தப்பட்டுள்ளன. ஆகவே அதன் தத்துவங்களுடன் தன்னைப் பழக்கப்படுத்திக்கொண்டு, அதன் போக்கு எப்படியிருக்க வேண்டும் என்பதை அறிவது அவனது உற்சாகமும் கடமையுமாகிறது.

ஒவ்வொரு கலையும் விஞ்ஞானமும் முதலில் பக்குவமற்றுத்தான் தெரிந்திருக்கும். அதைப் படித்து முன்னேற்றப்படுத்தி இப்பொழுது நாம் கூறும் 'பூர்ண பக்குவத்திற்கு'க் கொண்டுவந்திருக்கிறது பல தலைமுறைகளின் இடைவிடாத உழைப்பு. தத்துவத்தில் மட்டும் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவேயில்லை. அமெரிக்கப் புரட்சி ஆரம்பித்தவரையில் பழக்கத்திலும்கூட எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை. பிரான்சைத் தவிர மற்ற ஐரோப்பிய தேசங்களில் அறியாமை நிரம்பிய பழங்காலத்தில் நிறுவப்பட்ட அதே அமைப்புக்களும் முறைமைகளும் இன்னமும் தொடர்ந்து வருகின்றன. அவற்றின் பழமையே தத்துவத்தின் இடத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. அவற்றின் ஆரம்பத்தை ஆராய்ச்சி செய்வதும்

தடுக்கப்படுகிறது. எந்த உரிமையால் அவை வழக்கத்தி லிருக்கின்றன என்பதைப் பரிசீலனை செய்வதும் தடுக்கப் படுகிறது. இது எப்படி நிகழ்ந்தது என்பதைக் கேட்டால் விடையளிப்பது வெகு சுலபமே. பொய்மையான தத்து வத்தின்மீது அவை நிர்மாணிக்கப்பட்டன. தாங்கள் கண்டுபிடிக்கப்படுவதைத் தடுக்கத் தங்கள் சக்தியை அவை பிரயோகிக்கின்றன.

அரசியல் சாஸ்திரத்தை மர்மங்கள் சூழ்ந்துள்ளன. மனித சமுதாயத்தை அடிமைப்படுத்தவும், கொள்ளை யடிக்கவும் அவை கருத்துக் கொண்டுள்ளன. இருப்பி னும் குறைவான மர்மம் கொண்டதும், இலகுவில் அறியக் கூடியதும் அரசியல் சாஸ்திரமேயாகும். சொற்ப திறமையும்கூட விசாரணைகளைச் சரியான இடத்தில் துவக்குமானால், அது நஷ்டமாகாது. ஒவ்வொரு கலைக் கும் சாஸ்திரத்திற்கும் அது துவக்கமாகும் இடம் அல்லது அரிச்சுவடி இருக்கவே இருக்கிறது. அந்தத் துவக்கும் இடமே வளர்ச்சிக்கு அனுகூலப்படுத்தி உதவி யளிக்கிறது. இதே முறைமையே அரசியல் சாஸ்திரத் திலுங்கூட அனுஷ்டிக்கப்பட்டாக வேண்டும்.

பிரபுக்களாட்சி, குடியரசு, ஒரு சிலர் சேர்ந்து நடத்தும் அரசு, முடியாட்சி ஆகியவை அரசியலின் பல விதங்கள். அவை தொகுக்கப்பட்டிருக்கும் பல பகுதி களை முதலிலேயே கூறிக் குழப்பத்தை உண்டாக்குவதை விடச் சிறந்த முறை, அவற்றைப் 'பிரதான பகுதிகள்' என்று அழைக்கப்படும் பெரும் பகுதிகள் கீழ்க் கூறி ஆரம்பிப்பதேயாகும். இப்பிரதான பகுதிகளின் கீழ்ப் பல சிறு பகுதிகள் பகுக்கப்பட்டுள்ளன. அத்தகைய பிரதான பகுதிகள் இரண்டேயாகும்:

அரசின் அடிப்படைத் தத்துவங்கள்

முதலாவது : தேர்தலும் பிரதிநிதித்துவமும் சிருஷ்டிக்கும் அரசு.

இரண்டாவது: பரம்பரைப் பாத்தியத்தால் உண்டாக்கப்படும் அரசு.

அரசியலின் எல்லா முறைமைகளும் எண்ணிக்கையில் பலவாக இருந்தாலும், முரண்பட்டவைகளாக இருந்தாலும், இப்பிரதான பகுதிகள் ஏதேனும் ஒன்றின் கீழ்ப் பாகுபடுத்தப்படுகின்றன. ஏனென்றால் அவை பிரதிநிதித்துவ முறை அல்லது பரம்பரைப் பாத்தியமுறை ஆகிய இரண்டிலொன்ருகவே இருக்கும். ஹாலந்தின் பழைய அரசும், இங்கிலாந்தின் இன்றைய அரசும் 'கலப்பு அரசாங்கம்' எனப்படும். இதன் பகுதிகளைத் தனித்தனியாக யோசிக்கப்போனல் அவை பிரதிநிதித்துவம் அல்லது பரம்பரைப் பாத்தியம் என்று பிரியும். அப்படியிருந்தாலும் மேற்படி விதி இதற்கு எத்தகைய விலக்கையும் அளிக்கவில்லை.

நம் ஆராச்சியை நாம் இவ்விடத்தில் ஆரம்பிப்போம். முதலில் நாம் பிரதான பகுதிகளின் தன்மையைப் பரிசீலிக்கவேண்டும். 'கொள்கையில்' அவை சமமாக, சரியாக இருக்குமானல் நாம் வேண்டுவது அபிப்பிராயமேயாகும். ஒன்று வெளிப்படையாகவே மற்றதைவிட மேலானதாக இருக்குமானல், அந்த வித்தியாசமே நாம் தெரிந்தெடுப்பதை நிர்வகித்துக் காட்டுகிறது. ஆனல் அவற்றுள் ஒன்று இருக்கவே கூடாதபடி முழுப் பொய்யாக இருக்குமானல் விஷயம் உடனே தீர்ந்துவிடுகிறது; ஏனென்றால் இரண்டே முறைமைகள் உள்ள ஒரு விஷயத்தில், ஒன்றின்மீது மாறுபாடு நிரூபிக்கப்பட்டுவிட்டால் மற்றொன்றை ஒப்புக்கொள்ள வேண்டியதாகவே ஏற்

பட்டுப் போகிறது. அதனால் மற்றதைச் 'சரி' என்று ஒப்புக்கொண்டதாகி விடுகிறது.

இன்று உலகில் பரவிவரும் மாறுபாடுகளின் ஆரம்பம் இம்மாதிரியான ஒரு நிலைமையிலிருந்தே உண்டாகின்றது. தற்போதைய யுத்தம் மக்களின் உரிமைகளின்மீது நிர்மாணிக்கப்பட்ட பிரதிநிதித்துவ முறைமைக்கும், வஞ்சகக் களவின் மூலமாக ஏற்பட்ட பரம்பரைப் பாத்ய முறைமைக்கும் இடையே ஏற்பட்டுள்ள போராட்டமே. முடியரசு, இராஜரிகம், பிரபுக்களாட்சி என்று நாம் கூறுபவை இந்தப் பரம்பரை முறையை வெற்றுச் சொல்லாகவோ அல்லது விஷயமாகவோ போதுமான அளவிற்கு விஸ்தரிக்கவில்லை. அவை பரம்பரை முறையின் இரண்டாந்தரக் குறிப்புக்களாகவோ அல்லது பொருள்களாகவோ இருக்கின்றன. அம்முறை இருக்கக்கூடிய உரிமையை இழந்துவிட்டால் அவை தாமாகவே வீழ்ந்துவிடும். முடியாட்சி, இராஜரிகம், பிரபுக்களாட்சி ஆகிய சொற்கள் இல்லாமலிருந்தாலும் அல்லது அவற்றிற்குப் பதிலாக வேறு சொற்கள் போடப்பட்டிருந்தாலும், பரம்பரை முறை அதனால் மாறுபட்டுவிடப் போவதில்லை. இப்பொழுது இருப்பதைப் போன்ற அதே முறை வேறு ஏதோ பெயரில் இருக்கவே இருக்கும்.

இன்றைய புரட்சிகளின் தன்மை பிரதிநிதித்துவ அரசியலின்மீது, பரம்பரை முறைமைக்கு எதிராக அறைபட்டு, பிரதானம் பெற்றது என்பது உண்மை. வேறு வித்தியாசம் எதுவுமே கொள்கையின் பூர்ணத்தை எட்டுவதில்லை.

இங்ஙனம் விஷயத்தைப் பொதுவாக ஆரம்பித்த பிறகு, முதலில் பரம்பரை முறையைப் பரிசீலிக்க நான்

ஆரம்பிக்கிறேன்; ஏனென்ருல் காலத்தைக் கருதுமிடத்து அதுவே முதலிடம் பெறுகிறது. பிரதிநிதித்துவ முறை நவீன உலகின் சிருஷ்டி. இது என் அபிப்பிராயம். இதில் எவ்விதச் சந்தேகமும் ஏற்படாது என்று முன்கூட்டியே நான் அறிவித்து விடுகிறேன். பரம்பரை முறை அரசு இருக்கவே உரிமை கிடையாது. இதைப் போன்ற உண்மையான விஷயம் 'யூக்லிட்' இயற்றிய 'அளவுக் கணக்கில்' கூடக் கிடையாது. எம் மனிதனிடமிருந்தாவது பரம்பரை முறையின் அதிகாரப்பிரயோகத்தை எடுத்துக் கொள்வோமானல் நாம் புதியதாக எதையும் எடுத்துக்கொண்டு விடுவதில்லை. அவன் வைத்துக்கொள்ள உரிமையில்லாத ஒன்றினையே நாம் கைப்பற்றிக் கொள்ளுகிரும்; எவ்விதச் சட்டமும் வழக்கமும் கொடுத்திராத அல்லது கொடுத்திருக்க முடியாத ஒன்றையே நாம் கைப்பற்றிக் கொள்ளுகிரும்.

பரம்பரை அரசியல் இருக்கவே உரிமையில்லை என்ற பின்னர், அப்படி உரிமையே கிடையாது என்பது நிரூபிக்கப்படக் கூடுமானல், விதிவிலக்கு முறையின்மீது ஆலோசிப்பதின் மூலமாகப் பிரதிநிதித்துவ அரசியலை ஒப்புக்கொள்ளவே வேண்டும்.

தேர்தலும் பிரதிநிதித்துவமும் கொண்ட அரசியலைப் பற்றி யோசிக்கும்பொழுது, அது எங்கே, எப்படி, எந்த உரிமையால் ஆரம்பமாயிற்று என்பதை விசாரிப்பதில் வியப்படைகிரும். அதன் உதயமே எப்பொழுதும் கவனத்தில் இருக்கிறது. மனிதனே அதன் உதயம். அந்த உரிமையின் சாட்சியமும் அவனே. அவன் வாழ்வதிலேயே அதன் வாழ்வின் உரிமையும் இருக்கிறது. அவனே அதன் உரிமைப் பத்திரம்.

பிரதிநிதித்துவ அரசியலின் உண்மையான ஒரே அடிப்படை 'சம உரிமையே' ஆகும். ஒவ்வொரு மனிதனுக்கும் பிரதிநிதிகளின் தேர்தல் விஷயத்தில் ஒரு வாக்கு அளிக்கும் உரிமை உண்டு. அதற்கு மேல் வாக்களிக்க முடியாது. வாக்களிக்கப்படும் உரிமையிலிருந்து விலக்கவோ, தேர்ந்தெடுப்பதிலிருந்து அல்லது தேர்ந்தெடுக்கப் படுவதிலிருந்து தடுக்கவோ, ஏழைகளைத் தள்ளிவிடவோ கூடிய உரிமை தனவந்தனுக்குக் கிடையாது; அதைபோல் தனவந்தர்களைத் தள்ளிவிடக்கூடிய உரிமை ஏழைகளுக்குக் கிடையாது. அப்படி இரு தரப்பிலும் முயற்சி செய்யப்பட்டாலும் அல்லது பிரேரேபிக்கப்பட்டாலும், அது ஒரு பலாத்காரப் பிரச்னையே ஆகும்; உரிமைபெற்ற பிரச்னை யாகாது. ஒருவனைத் தவிர்க்க மற்றவன் யார்? மற்றவனுக்கும் அவனைத் தவிர்க்கும் உரிமையிருக்கிறதே!

'ஏகாதிபத்தியம்' என்று இப்பொழுது அழைக்கப் படுவது உரிமைகள் சமநிலையற்றுள்ளதையே குறிப்பிடும். உரிமை பேதங்களை உண்டாக்க உரிமை கொண்டுள்ள இங்கபர்கள் யாவர்? செல்வந்தர்கள் தாங்களாகவே தங்களை விலக்கிக் கொள்வார்களா? இல்லை. எவ்வுரிமை யின்மீது அவர்களை விலக்க முடியும்? எம்மனிதனுக் கேனும், அல்லது எந்த வகுப்பினருக்கேனும் தன்னை அல்லது தங்களைத் தவிர்த்துக்கொள்ள உரிமையுண்டா என்பதே ஒரு கேள்வியாக இருக்கும். ஆனால் எது எப்படியிருந்தாலும், ஒருவரை மற்றொருவர் தவிர்க்க அவர்களுக்கு உரிமை இருக்க முடியாது. ஏழைகள் அத் தகைய உரிமையைத் தனவந்தர்களுக்கு விட்டுக்கொடுத்து விடமாட்டார்கள். தனவந்தர்களும் அதே மாதிரி ஏழை களுக்கு விட்டுக் கொடுக்கமாட்டார்கள். அப்படிக் கருது

வதானுலும்கூட, அது அக்கிரமமான அதிகாரத்தைமேற் கொள்வதைப் போலாகும்; கொள்ளையடிக்க ஏதோ உரிமையை மேற்கொள்வது போலவும் இருக்கும். சுய உரிமைகள் புனிதமான பகுதியான சொத்தின் ஒருவகை யாகும். அவற்றுள் பிரதிநிதிகளுக்கு வாக்களிக்கும் உரிமையும் ஒன்ருகும். ஒருவனின் சொத்துரிமையை நீக்கவோ, களவாடவோ, தன் செல்வத்தை உபயோகித் தாலும், செல்வமளிக்கும் செல்வாக்கைப் பயன்படுத்தி ஞலும், அது துப்பாக்கிகளைப் பிரயோகிப்பது போலாகும். மேலும் அவற்றை அவனிடமிருந்தே எடுத்துக் கொண் டதைப் போன்று கருதப்படும்.

சமூகத்தின் ஒரு பகுதியினர் ஒன்றுகூடி மற்ருெரு பகுதியினரை அவர்களது உரிமையிலிருந்து நீக்கும் பொழுதே 'சமமற்ற உரிமை' தோன்றுகிறது. குறை வாகவோ அல்லது அதிகமாகவோ ஒரு குறிப்பிட்ட அள வுள்ள சொத்துக்கொண்ட நபர்களுக்கே வாக்களிக்கும், தெரிந்தெடுக்கும் அல்லது தெரிந்தெடுக்கப்படும் உரிமை உரியதாகும் என்பது ஒரு சட்டமாக்கப்பட்டாலும் அல்லது திட்டத்தின் ஒரு பகுதியாக்கப்பட்டாலும் அம் மாதிரியான நபர்களின் தொகுதி அப்படியல்லாத நபர் களின் தொகுதியை விலக்கிவிட முடியும். மற்றவர்களை நீக்கி வைக்கும்பொருட்டு சுதாவாக சிருஷ்டிக்கப்பட்ட சமூகத்தின் ஒரு பகுதியைப் போல், தாங்களே தங்க ளுக்கு அதிகாரத்தை அளித்துக் கொள்வதைப் போலாகும்.

சம உரிமைகளை எதிர்ப்போர், 'நிராகரிப்பு' தங் களின்மீது ஏற்படவேண்டும் என்று கருதுவதில்லை என் பதை நிச்சயமாகக் கொள்ளலாம். இம்மாதிரியான

அபிப்பிராயத்தில் பெருமிதத்தை புறக்கணித்தாலும்கூட ஏகாதிபத்தியம் என்பது நகைப்பிற் கிடமான தாகிவிடுகிறது. சம உரிமைகளை எதிர்க்கும் தொகுதியினர் லாபகரமான விளையாட்டை விளையாடுவதாகக் கருதுகின்றனர். அதில் லாபத்திற்கும் நஷ்டத்திற்கும் சந்தர்ப்பம் உண்டு. இம்மாதிரியான தாழ்வான சுயநல எண்ணம் சுயமான பெருமிதத்தைத் தைரியப்படுத்தி ஊக்கமளிக்கிறது. எப்படியும் 'சமத்துவ நியதி' அவர்களையும் தன்னுள் சேர்த்துக் கொண்டுள்ளது. தங்கள் எதிராளிகளைவிட அதிகமான உரிமைகள் பெற இயலாது விலகிக் கொண்டாலும், குறைவான உரிமைகள் அவர்களுக்குப் தரப்படப் போவதேயில்லை. இவ்வெண்ணம் பல்லாயிரக் கணக்கானவர்களுக்கு மரணத்தை அளிக்கக்கூடியதாக இருந்திருக்கிறது. அவர்கள் சம உரிமையில் திருப்தி கொள்ளாமல் அதிக உரிமையை நாடியவர்கள். எல்லாவற்றையும் இழந்து நஷ்டப்படும் வரையில் அப்படி அதிக உரிமையை நாடுகிறார்கள். பிறர்மீது திணிக்க நினைக்கவும் கூசும், சமமற்ற தாழ்வான உரிமையைத் தாங்களே அனுபவிக்கிறார்கள்.

எதை எப்படிக் கருதினாலும், வாக்களிக்கும் உரிமையின் தத்துவத்தைச் சொத்தாக்குவது ராஜீயமாகாது. அது அபாயகரமானதாகும். கேலிக்கிடமானதும்கூட. என்றும் அது அநீதியாகவே விளங்கும்.

வாக்களிக்கும் உரிமையுடன் ஐக்கியப்படுத்தப்படும் சொத்தின் மதிப்போ அல்லது தொகையோ அதிகமாக இருக்குமானால், அது பெரும்பான்மையான மக்களை உதறித் தள்ளிவிடும். அவர்களை அரசாங்கத்திற்கு எதிரான பொது லட்சியத்தில் ஒன்றுபடுத்தும். அரசாங்க

ஆதரவாளர்களுக்கு எதிரான பொது லட்சியத்தில் அவர்களைப் பிணைக்கும். பெருர்பான்மையினரே அதிகார உரிமையினராதலால், அவர்கள் அத்தகைய அரசாங்கத்தையும் அதை ஆதரிப்போரையும் தங்கள் இஷ்டப்படி கவிழ்த்துவிட முடியும்.

இத்தகைய அபாயத்தைத் தவிர்க்கும் பொருட்டு உரிமைக்காகச் சிறு அளவு சொத்து வேண்டும் என்று ஏற்படுத்தி விட்டால், அது சுதந்திரத்தில் இழுக்கை வெளிக்காட்டும். பிரதான்யமளிக்கப்படாமலும் தற்செயலாகவும் அது போட்டியில் வைக்கப்படும். பெட்டைக் குதிரைக் குட்டி ஒரு புருவையோ அல்லது கோவேறு கழுதையையோ அதிருஷ்டவசமாகப் பெறுவதாகக் கொள்வோம். அது நாம் இங்கே வேண்டும் அளவு சொத்திற்கு மதிப்புள்ளதாக இருப்பதாகவும் வைத்துக் கொள்வோம். அந்த மதிப்பு அதன் சொந்தக்காரருக்கு வாக்குரிமையை அளித்துவிடுகிறது. அப்புருவோ கோவேறு கழுதையோ மாண்டுவிடுமானால், வாக்குரிமை சொந்தக்காரரிடமிருந்து பறிக்கப்பட்டு விடுமென்றால், அவ்வுரிமையின் பூர்வாங்கம் யாரிடமிருக்கிறது? மனிதனிடம் இருக்கிறதா? அல்லது கோவேறு கழுதையிடம் இருக்கிறதா? மதிப்பின்றி எவ்வளவோ மார்க்கங்களால் செல்வம் சேமிக்கமுடியும் என்பதையும், தவறின்றி அதை இழந்துவிட முடியும் என்பதையும் யோசிக்கும்பொழுது, அதை உரிமைகளுக்கான அடிப்படையாகக் கொள்ளும் நோக்கத்தை வெறுக்கவேண்டி ஏற்படுகிறது.

இதில் தவறுள்ள பகுதியும் இருக்கிறது. அதுவே வாக்களிக்கும் உரிமையிலிருந்து நிராகரிப்பு. அத்தகைய நிராகரிப்பு, நிராகரிக்கப்பட்டவர்களின் நடத்தை மாசு

பட்டது என்பதைக் குறிப்பிடுகிறது. சமுதாயத்தின் ஒரு பகுதியினர் பிறிதொரு பகுதியினர்மீது குறைகூறவே உரிமையில்லை. வெளிச் சந்தர்ப்பங்கள் எதுவும் இதை நேர்மையான தாக்கிவிட முடியாது. செல்வம் நன்னடக்கையின் சாட்சியமாகாது. வறுமை நன்னடக்கையின் தேவையுமாகாது. ஆனால் எதிர்மாருக, துரோகத்தின் சாட்சியமாகச் செல்வம் இருப்பதுண்டு. வறுமை, அறியாமைக்கு எதிரான சாட்சியமாகவும் இருப்பதுண்டு. ஆகவே குறைவான அல்லது அதிகமான செல்வத்தை அடிப்படையாகக் கொண்டால், அச்செல்வத்தை அடையும் மார்க்கத்தையும் அடிப்படையானதாக்க வேண்டும்.

வாக்களிக்கப்படும் உரிமையிலிருந்து நீக்கப்படுவது ஒரே ஒரு முகாந்தரத்தின்மீது மட்டுமே நீதியானதாகக் கருதப்படலாம். பிறரது வாக்களிக்கும் உரிமையைக் களவாட எண்ணுவோரின்மீது, அதைத் தண்டனையாக விதிப்பதே அந்த முகாந்தரமாகும். பிரதிநிதிகளுக்கு வாக்களிக்கும் உரிமை எல்லாவற்றிற்கும் மேம்பட்டது. மற்ற உரிமைகள் அதனாலேயே பாதுகாக்கப்படவேண்டும். இவ்வுரிமையை எடுத்துவிடுவது ஒரு மனிதனை அடிமைத்தனத்திற்கு ஓட்டுவதைப்போலாகும். பிறிதொருவனின் எண்ணத்திற்குக் கீழ்ப்படிவதே அடிமைத்தனம். பிரதிநிதிகளுக்குத் தேர்தலில் வாக்களிக்க அவனால் முடியாது. ஆகவே ஒரு தொகுதி மக்களின் வாக்குரிமையை நீக்கிவிடும் பிரேரணை அவர்களது செல்வத்தைப் பறிக்கும் பிரேரணையே ஆகும். நாம் உரிமையைப் பற்றிப் பேசும்பொழுது கடமையின் கருத்தையும் அத்துடன் சேர்க்கவேண்டும். உரிமைகள் தாமாகவே கடமைகளாகின்றன. நாம் அனுபவிக்கும் உரிமை மற்றவனுக்கு

அதை அளிக்கும் கடமையாகிறது. அவனும் நமக்கு அதே நிச்சயத்தை அளிக்கிறான். கடமையை மீறுவோர் நியாயமாகவே தங்கள் உரிமையை இழந்துவிடுவார்கள்.

ராஜீய நோக்குடனே இதைப் பார்ப்போமானால் அரசாங்கத்தின் நிரந்தரப் பாதுகாப்பும் திடமும் அதை ஆதரிப்பதில் உற்சாகம் கொண்ட மக்களின் எண்ணிக்கையைப் பொறுத்திருக்கும். ஆகவே சமத்துவ உரிமையின் மூலமாக உற்சாகத்தை ஊட்டுவதே உண்மையான கொள்கை. உரிமைப்பிரகாரிப்பு ஏற்பட்டால்தான் ஆபத்து நேரிடுகிறது. வாக்குரிமையிலிருந்து மக்களை நீக்கிவிடுவது சாத்தியம். ஆனால் அப்படி நீக்கிவிடப்படுவதை எதிர்த்துக் கலவரம் செய்யும் உரிமையிலிருந்து அவர்களை நீக்கிவிட முடியாது. எல்லா உரிமைகளும் பறிக்கப்படும் பொழுது, கலகம் செய்யும் உரிமை பூர்ணமாக ஏற்பட்டுப் போகிறது.

அவர்களுக்கு உரிமைகள் கிடையாது என்றோ, அல்லது உரிமைகள் மனிதர்களின் ஒரு பகுதியினருக்கே உண்டு என்றோ, அல்லது அரசாங்கம் இருப்பதே உரிமை என்றோ, மக்கள் அச்சுறுத்தப்பட்டால் அவர்களை அதிகார பூர்வமாக ஆளுவது கடினமல்ல. அவர்களது அறியாமை. அல்லது மூடநம்பிக்கை அதைச் சுலபமாக்கும் மார்க்கத்தை அளிக்கிறது. ஆனால் அறியாமை அகன்றால் அத்துடனே மூடநம்பிக்கையும் அகன்று போகிறது. தங்கள்மீது திணிக்கப்பட்டு நிகழ்ந்தவைகளைக் காணும் பொழுதும், விவசாயிகளும் தொழிலாளர்களுமே அகில உலகத்துச் செல்வத்தின் பிரதான காரணகர்த்தர்கள் என்று உணரும்பொழுதும், அப்படி அவர்களால் உண்டாக்கப்படும் செல்வம் இயற்கை தானாகவே உற்பத்தி

செய்யக்கூடிய செல்வத்தைவிட அதிகமானது என்பதை அறியும்பொழுதும், அவர்களது உபயோகத்திலேயே அவர்களது முடிவும் இருக்கிறது என்பதை உணரத் துவங்கும்பொழுதும், சமூகத்தின் அங்கத்தினர்களாகத் தங்கள் உரிமைகளை அறிய ஆரம்பிக்கும்பொழுதும், அதற்குமேல் அவர்களை அரசுபுரிவது இயலாது போகிறது. ஒருமுறை கண்டுபிடிக்கப்பட்ட சூதை மறுபடி நடித்துக் காட்டுவது இயலாது. அப்படிச் செய்ய முயன்ருல் அது கேலிக்கிடமாகி, அறிவையும் அழைத்துவிடும்.

சொத்து எப்பொழுதுமே சமமாக இராது என்பது திண்ணம். கைத்தொழில், மேன்மையான குணாதிசயங்கள், மேற்பார்வைத்திறன், மிக்க சிக்கனம், அதிருஷ்ட சந்தர்ப்பங்கள் அல்லது அவற்றின் எதிர் மாறுபாடுகள் அல்லது அவற்றை இயற்றும் காரணங்கள் ஆகியவை எப்பொழுதுமே இத்தகைய முடிவை உண்டாக்கலாம். பேராசை, அடக்குமுறை ஆகிய துர்ச்சொற்களைக் கைக்கொள்ளத் தேவையே இல்லை. தவிர வேறு தினுசான சில மனிதர்களும் இருக்கிருர்கள். அவர்கள் செல்வத்தை வெறுப்பதில்லை. அதைச் சம்பாதிக்கக் கீழ்த்தரமான செயல்களில் பிரவேசிக்கமாட்டார்கள். தங்கள் தேவைக்கு மேல் சம்பாதிக்கவோ அல்லது தங்கள் சுதந்திர வாழ்விற்கு மேற்பட்டுச் சம்பாதிக்கவோ கஷ்டப்படமாட்டார்கள்; மற்றவர்களும் தண்டனைக்கு உட்படாத மார்க்கம் எதுவாயினும் அதன்மூலமாக நிதிசேமிக்க ஆசை கொள்வார்கள். பணம் சம்பாதிப்பதோ அவர்களது வாழ்வின் கிரியையாகிப் போகிறது. அதை ஒரு மதசம்பிரதாயத்தைப்போல் பின்பற்றுகிருர்கள். நிதியைப் பொறுத்தவரையில் அதை நேர்மையாகவே சம்

யாதிக்கவேண்டும். துராக்கிருதமாக அதைப் பயன்படுத்தக்கூடாது. எதேச்சாதிகார உரிமை தத்துவமாகும் பொழுது, செல்வம் துராக்கிருதமாகப் பயன்படுத்தப்படுகிறது.

பாங்குகள், வியாபார நிலையங்களைப் போன்ற முற்றும் பணப் பெருக்குள்ள நிலையங்களில், அதில் உள்ள அங்கத்தினர்களின் உரிமை அவர்கள் அதிலிடும் நிதியாலேயே ஏற்படுகிறது. சொத்திலிருந்து எழும் உரிமையைவிட வேறு எவ்வித உரிமையும் அதன் நிர்வாகத்தில் பயன்படுத்தப்படுவதில்லை. நிர்வாகம் என்பதுகூட சொத்தைத் தவிர வேறு எதனுலும் நடத்தப்படுவதில்லை.

ஆனல் பிரதிநிதித்துவ முறையில் நடத்தப்படும் அரசியலின் விஷயமே வேறு. சொத்துள்ளவன், இல்லாதவன் என்ற வித்தியாசமின்றி ஒவ்வொரு மனிதனையும் ஒவ்வொரு பொருளையும் தேசீய சமுகத்தின் அங்கத்தினனுகக் கருதுகிறது அரசாங்கம். ஆகவே பிரதான தத்துவம் விரும்புவது இதுதான். ஒவ்வொரு மனிதனுக்கும், ஒவ்வோர் உரிமைக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவேண்டும். அதில், பணத்தைச் சேமித்து வைத்துக் கொள்வதும் ஓர் உரிமையாகும். அப்படியிருந்தாலும் அது பிரதான வர்க்கத்தைச் சேர்ந்ததல்ல. சொத்தைக் காப்பதைவிடத் தன்னைப் பாதுகாத்துக்கொள்வதே மனிதனுக்குப் புனிதமானது. பிழைப்பிற்கு மார்க்கம் அளித்துக் குடும்பரக்ஷகத்திற்கு உதவும் எவ்விதமான வேலையும் அல்லது தொழிலும் 'சொத்து' என்றே அழைக்கப்படும். அது தொழிலாளியான அவன் சொத்து. அக்கைத்தொழில் அவனுக்கு வெளிப்புறச் சொத்தாகவும் பாதுகாப்பாகவும் விளங்குகிறது. அக்

கைத்தொழில் அவனிடம் இல்லாவிட்டால், அது வேறு ஒருவனின் பாதுகாப்பாகவும் செல்வமாகவும் விளங்கும்.

சொத்து அதிகமிருந்தாலும் குறைவாக இருந்தாலும் அதற்கு மேற்பட்ட பாதுகாப்பு, இயன்றவரை சமூகத்தின் ஒவ்வொரு பகுதியையும் பிரித்துவிடுவதும், குறைகளின் காரணத்தைப் பிரித்துவிடுவதும், ரோஷத்தின் கருத்தைப் பிரித்துவிடுவதுமேயாகும். சம உரிமையால் மட்டுமே இது சாத்தியமாகும். உரிமைகள் சுபீட்சமாக இருந்தால் அதன் விளைவான சொத்தும் சுபீட்சமாகவே இருக்கும். ஆனால் சொத்து சமமற்ற அல்லது ஏகாதிபத்திய உரிமைகளின் காரணமாகப் பயன்படுத்தப்படும் பொழுது அது துயரத்தையும் சலிப்பையும் தூண்டிவிடுகிறது. சொத்தின் ஆதிக்கத்தால் பாதிக்கப்படும் சமூகத்தின் உறுதிமொழியில், சொத்து சுபீட்சமாக இருக்கும் என்று நம்புவது இயற்கைக்கு மாறுபட்டதாகும்.

ஏகாதிபத்திய உரிமைகளைப் பெற, சொத்தை நொண்டிச் சாக்காக்கிக்கொள்வது அநீதியாகும்; நீசத்தனமானதும்கூட. அதைவிட அதிகமான அளவிட முடியாத முட்டாள்தனம் சொத்திற்கு மதிப்பையளித்து அத்துடன் சில உரிமைகளையும் பிணைத்துவிடுவதே. 'மதிப்பு' என்பது 'உடைமை' என்பதேயன்றி வேறல்ல. இயற்கை அடிக்கடி விசித்திரமான உயர்ந்த மக்களை உலகிற்கு அளிக்கிறது. அவர்கள் திறமையாலும் பொது ஜன அபிப்பிராயத்தாலும் புகழை எட்டுகின்றனர். பிளேட்டோ, சாக்ரடீஸ், அரிஸ்டாடில் ஆகியோர் அப்படிப்பட்டவர்கள்; உண்மையிலேயே பெரிய மகான்கள்; பிரபுத்துவமானவர்கள். ஆனால் பிரபுக்களைச் சிருஷ்டிக்க

அரசாங்கமே முயல்வது அவதூருகும். அது சிருஷ்டிக்கும் பிரபுக்களும் போலிகளாகவே இருப்பர்.

பிரபுக்களைச் சிருஷ்டிப்பது 'மெழுக்கு வேலையைப்' போன்றது. அவ்வேலையே ஏகாதிபத்தியம் என்னும் பெயரைக் கொண்டுள்ளது. அதைக் குழந்தையின் கேலி விளையாட்டாகக் கருதினாலன்றி அதன் அவலம் குறைவு படாது. வீண் நடத்தை பிரதானமானதல்ல; ஆகவே அதை நாம் மன்னித்து விடுகிறோம். அதே முகாந்தரத்தின்பேரில் பட்டங்களின் வீண் நடத்தையையும் மன்னித்து விடலாம். ஆனால் எதேச்சாதிகாரத்தின் தோற்றுவாய் வீண் நடத்தையைவிடக் கீழ்த்தரமானது. அது கொள்ளையடிப்பதாகவே இருந்தது. எல்லாத் தேசத்திலும் முதலில் தோன்றிய எதேச்சாதிகாரிகள் கொள்ளைக்காரர்களே. பிற்காலத்தில் தோன்றிய எதேச்சாதிகாரிகளோ பேச்சாளர்களாகவே இருந்தனர்.

பெருத்த நிலப்பகுதிகளைத் தங்கள் சொத்தாகக் கொண்டுள்ளவர்கள், தாங்கள் அத்தேசத்தின்மீது படையெடுத்தபொழுது அதன் சாந்தமான குடிகளிடமிருந்து அவற்றைப் பறித்துக் கொண்டார்கள். இது இங்கிலாந்தில் வெட்ட வெளிச்சமாகத் தெரிந்த விஷயம். இதே மாதிரியான விஷயத்தையே மற்றத் தேசங்களிலும் காண முடியும். அந்த எஸ்டேட்டுகளை அவர்கள் நியாயமாக அடைந்திருக்க முடியாது. அவர்கள் அதை எப்படி அடைந்திருக்க முடியும் என்று வினவப் போனால் 'கொள்ளை' என்பதைத் தவிர வேறு பதிலே தர முடியாது. வியாபாரத்தினாலோ, வர்த்தகத்தாலோ, கைத்தொழிலாலோ, விவசாயத்தினாலோ அல்லது பிரசித்தமான வேறு உத்தியோகத்தினாலோ அவற்றை

அடையவில்லை என்பது நிச்சயம். அப்படியானல் அவற்றை எப்படி அடைந்தார்கள்? ஏகாதிபத்தியமே! உன் தோற்றுவாயைக் கேட்டுப் பூரிப்படை. உன் முன்னேர்கள் கள்வர்கள். அவர்கள் அக்காலத்தின் கொடிய கொள்ளைக்காரர்கள்; பட்டங்கள் எனப்படும் போலிப் பெயர்களின் போர்வையில் தங்களை மறைத்துக்கொண்டு களவாடிய ஈனச் செயலின் இழுக்கை மறைக்க முயன்றனர். குற்றவாளிகள் இம்மாதிரி நடப்பது சகஜம். தங்கள் உண்மைப் பெயரிலே அவர்கள் செல்லமாட்டார்கள்.

நேர்மையாக அடைந்த சொத்து சம உரிமைகளால் அடையப்பட்டதாகும். ஆகவே அநீதியாகச் சேமிக்கப்பட்ட சொத்து உரிமைகளின் ஆதிபத்யத்தையே பாதுகாப்பாகக் கொள்ளும். ஒருவன் மற்றவனின் சொத்தைக் கொள்ளையடித்த பிறகு, களவாடப்பட்டவனின் உரிமைகளை நீக்கிவிட்டு, சொத்தைத் தனதாகப் பாதுகாக்கவே முயல்வான். ஏனெனில் கள்வன், தான் அரசனுன பின்னர் சௌக்கியமாக இருப்பதாகக் கருதுகிருன். ஆங்கில அரசாங்கத்தின் ஒரு பகுதியே பிரபுக்கள் சபை என்று அழைக்கப்படுகிறது. இச்சபையினராக இருந்தவர்களே நாம் இப்பொழுது கூறும் களவுகளை முதலில் செய்தவர்கள். களவாடிய சொத்தைப் பாதுகாக்கும் சபையாகவே இருந்து வந்தது 'பிரபுக்கள் சபை'.

ஏகாதிபத்தியத்தின் பிறப்பிடமே குற்றமுள்ளது. அதுவுமன்றி அது மனிதனின் குண, உடல் நடத்தைகளின் பேரில் கெடுதியுண்டாக்கும் தன்மை கொண்டது; அடிமைத் தனத்தைப்போல் மனிதனின் சௌகரியங்களைப் பலவீனப்படுத்துகிறது. எதிர்மாருன தவறுதல்களின்

மூலம் அது மேலெழும்பி, அவர்களை அழுத்தும் சக்தியிழந்து பலவீனத்தில் துவண்டுபோகிறது. பட்டம் பதவிகளில் நாட்டங்கொண்டுள்ள உள்ளம், என்றுமே உயரியதாக முடியாது. பொருள்களின் விளையாட்டுத்தனமே மனிதனை விழுங்கிவிடுகிறது.

ஆரம்பத் தத்துவங்களை அடிக்கடி குறிப்பிடுவதின் மூலமாக நான் தேசாபிமானத்தை அடிக்கடி புதுப்பித்துக்கொள்ளுகிறேன். இப்படிச் செய்வது எல்லாக் காலங்களிலும் அவசியமாகிறது. புரட்சியின் வளர்ச்சியில் இது மிகமிக அவசியமாகிறது. நேரிய எண்ணங்கள் நம் பழக்கத்தில் ஒன்றும் வரை இது அவசியமாகிறது. பொருள்களின் பூர்விகத்தைத் தேடுவதின்மூலம் நாம் அவற்றைப் பூர்ணமாக அறிந்து கொள்ளுகிறோம். அவற்றின் பூர்விகத்தையும் போக்கையும் நினைவிலிருத்துவதின்மூலம் அவற்றை நாம் என்றுமே மறக்கமாட்டோம்.

உரிமைகளின் பிறப்பைப்பற்றிய விசாரணை, உரிமைகள் ஒருவன் மற்றவனுக்கோ அல்லது ஒரு வகுப்பினர் மற்றொரு வகுப்பினருக்கோ அளிக்கும் வெகுமதிகள் அல்ல என்பதை விளக்கமாகக் காட்டும். ஆரம்பத்தில் உரிமைகளை அளிக்கக்கூடியவர் யார்? அவர் எத்தத்துவத்தினுல் அல்லது அதிகாரத்தினுல் உரிமைகளை அளிக்கும் உரிமையைப் பெற்றார்? உரிமைகளின் பிரகடனம் அவற்றைச் சிருஷ்டிப்பதாகப் பொருள்படாது; அவற்றை நன்கொடையாக அளிப்பதாகவுமாகாது. அவை இருக்கும் தத்துவத்தின் எடுத்துக்காட்டே அது. அதைத் தொடர்ந்து உரிமைகள் என்னவென்பதைப் பற்றிய விரிவுரை தொடரும். ஏனென்றால் ஒவ்வொரு சமூக உரிமையும் இயற்கையான ஒரு உரிமையை அஸ்திவார

மாகக் கொண்டுள்ளது. மனிதனுக்கு மனிதன் அவ்வுரிமைகளை அச்சுறுத்தும் ஏகோபித்த தத்துவத்தை அது தன்னுள் கொண்டுள்ளது. மனித உற்பத்தியிலன்றி வேறு எதிலும் உரிமைகளின் உற்பத்தியைக் காண்பது சாத்தியமல்ல. மனித இருக்கையிலேதான் உரிமைகளும் இருக்கின்றன. ஆகவே உரிமைகள் ஒவ்வொரு மனிதனிடத்திலும் சமமாகவே இருக்கவேண்டும். சம உரிமைத் தத்துவம் தெளிவானது; இலகுவானதும்கூட. ஒவ்வொருவராலும் அதை அறிந்துகொள்ள முடியும். தன் உரிமைகளை அறிவதாலேயே மனிதன் தன் கடமைகளை உணருகிறான். மனித உரிமைகள் சமமாக உள்ளவிடத்து, பிறரது உரிமைகளின் வன்மையுள்ள நம்பிக்கை, தன் உரிமைகளின் பாதுகாப்பு என்பதை முடிவாக உணர வேண்டும்.

சட்ட நிரூபண சபை அமைப்பில் சம உரிமைத் தத்துவத்தைவிட்டு விலகிச் சென்றாலும், அல்லது அதைத் திருத்திக்கொள்ள முயன்றாலும், நாம் கஷ்டங்களின் சிக்கலில் அகப்பட்டுக்கொள்வோம். அதிலிருந்து பின் செல்லும் மார்க்கமே இராது. நாம் எந்நிலையில்தான் நிற்பது? எத்தத்துவத்தைக் கொண்டு சுதந்திர மக்களின் பகுதியினரையும் ஏனையோரையும் பிரித்துக் காட்டுவது? சொத்து, அளவு கருவியாக்கப்பட்டால் அது சுதந்திரத்தின் நேரிய தத்துவத்திலிருந்து பூர்ணமாக விலகிச் செல்வதாகும். ஏனென்றால் சொத்து பொருளுடன் உரிமையைச் சேர்ப்பதாகும். மனிதனை அப்பொருளின் பிரதிநிதியாக்குகிறது. சொத்தைக் கொள்வதோ கலகத்தின் அஸ்திவாரத்தையே கொள்வதைப் போலாகும்; புத்தத்தை மூட்டிவிட்டு, அதையும் நேர்மையாக்குவதாகும்.

சொத்து இல்லாதவர்களின் உரிமையைப் பறிக்கும் கருவியாகச் சொத்து பிரயோகிக்கப்பட்டால் அது சட்டரீதியற்ற காரியத்திற்குப் பிரயோகிக்கப்படுவதாக நான் எண்ணுகிறேன்; துப்பாக்கியினர், ஒருசாரார் மட்டுமே பிரயோகிப்பதைப்போலாகும் என்று கூறலாம். இது நான் கொண்டுள்ள தத்துவம்.

இயற்கையில் எல்லோரும் சம உரிமை படைத்தவர்கள். ஆனால் எல்லோருமே சம அதிகாரம் கொண்டவர்களல்ல. சமூக ஒற்றுமையைத் திணிப்பதின் கருத்து அதிகாரத்தைச் சமமாக நிரவுவதேயாகும். சம உரிமைகளுக்கு உத்திரவாதமாகவோ அல்லது சமமாகவோ இருக்கும், அத்தகைய 'சம நிரவுதல்.' தேசத்தின் சட்டங்களைச் சரிவர அமைப்பது இம்முறையில் பயன்படுகிறது. சுய பாதுகாப்பைவிடச் சட்டப்பாதுகாப்பை மேலானதாக ஒவ்வொருவனும் ஏற்றுக்கொள்கிறான். ஆகவே அரசாங்க அமைப்பிலும் சட்டங்களின் அமைப்பிலும் ஒவ்வொரு மனிதனுக்கும் சம உரிமை இருக்கிறது. அமெரிக்கா, பிரான்சைப்போன்ற பரந்த தேசங்களிலும் சமூகங்களிலும், பிரதிநிதித்துவமே மனித உரிமையைச் செலுத்துகிறது; அதாவது தேர்தல் மூலமாக ஏற்படும் பிரதிநிதித்துவத்தால் செலுத்தப்படுகிறது. எனவே பிரதிநிதித்துவ அரசியலின் அமைப்பு உதயமாகிறது.

இதுவரையில் நான் தத்துவங்களைப்பற்றிய விஷயங்களைமட்டில் கூறிவந்தேன். முதலாவதாக, பரம்பரை அரசியல் இருப்பதற்கே உரிமை கிடையாது என்று கூறினேன். அதை எவ்விதமான கொள்கையின்மீதும் ஸ்தாபிக்கமுடியாது என்பதையும் விளக்கினேன். அது தத்துவத்தை மீறுவதாகும் என்பதையும் குறிப்பிட்டேன்.

இரண்டாவதாக, தேர்தல் மூலமாகப் பிரதிநிதித்துவம் கொண்ட அரசியல், மனிதனின் இயற்கையான தெய்வீக உரிமைகளிலிருந்து தோன்றிபது. (1) இயற்கையின் நிலையில் இருந்தால் செய்வதைப்போல் மனிதன் தனக்குத் தானே சட்டங்களை உண்டாக்கிக் கொண்டாலும், (2) சிறு குடியரசு நாடுகளில் மக்கள்கூடித் தங்கள் சட்டங்களை உண்டாக்கிக்கொள்வதைப்போல் சட்ட நிரூபண அரசுரிமையின் பகுதியை மனிதன் தனக்குத் தானே நிர்வகித்தாலும், (3) பிரதிநிதிகளைத் தேசிய அசெம்பிளியில் தனக்குப் பதிலாக இருக்கும்படி தெரிந்தெடுப்பதில் உரிமையைச் செலுத்தினாலும், எல்லாவற்றிலும் உரிமைகளின் பிறப்பிடம் ஒன்றேயாகும். முதலாவதில் அதிகாரக்குறைவு இருக்கிறது. இரண்டாவது சின்னஞ் சிறு குடியாட்சிகளுக்கு மட்டுமே சாத்தியமாகும். மூன்றாவது, மனித அரசாங்கம் நிர்மாணிக்கக் கூடிய பெருத்த அளவாகும்.

தத்துவ விஷயங்களை யடுத்து வருவது அபிப்பிராய சம்பந்தப்பட்ட விஷயங்கள். இவை இரண்டிற்குமிடையே உள்ள பாகுபாட்டை அறிவது அவசியம். மனிதர்களின் உரிமைகள் சமமானவைகளா என்பது அபிப்பிராய சம்பந்தப்பட்ட விஷயமல்ல; உரிமை சம்பந்தப்பட்ட விஷயம்: இறுதியாக, தத்துவம் சம்பந்தப்பட்ட விஷயம். பிறருக்கு அளிக்கும் வெகுமதிகளைப்போல் உரிமைகளை மக்கள் கொண்டிருக்கவில்லை. ஒவ்வொருவனுக்கும் தனித்தனியே இருக்கிறது உரிமை. சமூகம் பாதுகாப்பாளனே தவிர தர்மகர்த்தா அல்ல. அமெரிக்கா பிரான்ஸ் போன்ற அகன்ற நாடுகளின் சமூகத்தில் அரசியல் விவகாரங்களில் மனிதன் தன் உரிமையைத்

தேர்தல் பிரதிநிதித்துவம் மூலமாகவே செலுத்த முடியும். பிரதிநிதித்துவ முறையே, தத்துவ மியன்றுசெல்லும் ஒரே அரசாங்க முறை என்பது இதிலிருந்து தென்படும். சாதாரணமான குடியாட்சி சாத்தியமல்ல என்பதும் விளங்கும். ஆனால் அரசாங்கத்தில் பல அங்கங்கள் உண்டாக்கப்பட்டு அமைக்கப்படும் முறைமை முழுவதும் அபிப்பிராய சம்பந்தப்பட்ட விஷயமேயாகும். சம உரிமைத் தத்துவத்திற்கு ஏற்ப அரசாங்கத்தின் எல்லாப் பகுதிகளும் அமைவது அவசியமாகும். இத்தத்துவம் தர்மாத்மீக முறையில் பின்பற்றப்படுமானால் தவறுதல் ஏற்படவே முடியாது. அபிப்பிராயத்தில் தோன்றும் எந்தத் தவறுதலும்கூட நீண்டநாள் நீடிக்க முடியாது.

அபிப்பிராயம் சம்பந்தப்பட்டுள்ள எல்லா விஷயங்களிலும் சமூகப் பிணைப்பு, அல்லது சமூகத்தைப் பிணைத்து வைத்திருக்கும் தத்துவம்—பெரும்பான்மையோரின் அபிப்பிராயமே எல்லோருக்கும் சட்டமாகிறது என்பதைக் காட்டுகிறது. அந்த அபிப்பிராயத்திற்குச் சிறுபான்மையோர் அடங்கிக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். இது சம உரிமைத் தத்துவத்தைப் பரிபூர்ணமாக ஒப்புக்கொள்ளக் கூடியது; ஏனெனில் இதில் ஒவ்வொரு மனிதனுக்கும் தன் அபிப்பிராயத்தைத் தர உரிமை இருக்கிறது. ஆனால் எம்மனிதனும் தன் அபிப்பிராயம் பிறரை ஆட்சி புரியவேண்டும் என்று எதிர்பார்க்க உரிமை கிடையாது. இரண்டவதாக ஒரு மனிதனின் அபிப்பிராயம் பிரச்னைக்கு எதிராகவோ சாதகமாகவோ இருக்கும் என்பதை முன்கூட்டியே அறிந்திருக்க முடியாது. சில பிரச்னைகளில் அவன் பெரும்பான்மையோருடன் இருக்கும்படி நேரிடலாம்;

சிலவற்றில் சிறுபான்மையோருடன் இருக்கும்படி நேரிடலாம். ஒரு பிரச்னையில் கீழ்ப்படிதலை எதிர்பார்க்கும் விதிப்படியே பிறிதொன்றில் அவன் கீழ்ப்படியவேண்டும். பிரான்சில் புரட்சியின் போக்கில் ஏற்பட்ட எல்லா அலங்கோலங்களுக்கும் ஆரம்பம் சமஉரிமைத் தத்துவத்தை மீறியதாலேயே ஏற்பட்டதே தவிர, சமஉரிமைத் தத்துவத்தாலன்று. சமஉரிமைத் தத்துவம் அடிக்கடி மீறப்பட்டிருக்கிறது. சிறுபான்மையோரால் மட்டுமே அத்தத்துவம் மீறப்பட்டதேயன்றிப் பெரும்பான்மையோராலல்ல. சிறுபான்மையோர் தொகுதியிலும் சொத்துள்ளவர்களும் சொத்தில்லாதவர்களும் உண்டு. ஆகவே இனிச் சொத்து குறைநிசயங்களின் நிலையமாகாது; அதைவிட மேலாக சமஉரிமைகளின் நிலையமாகவும் முடியாது. இதை முன் கொண்டுள்ள அனுபவம் காட்டுகிறது. சில சமயங்களில் சிறுபான்மையோர் சரியான அபிப்பிராயம் கொண்டவர்களாகவும், பெரும்பான்மையோர் தவருன அபிப்பிராயம் கொண்டவர்களாகவும் இருப்பார்கள். ஆனல் அனுபவம் உண்மைகளை ருஜுப்படுத்தும்பொழுது, சிறுபான்மையோர் பெரும்பான்மையோராக அதிகரிப்பர். சுதந்திர அபிப்பிராயம், சமஉரிமைகளின் அமைதியான போக்கு ஆகியவற்றல் தவறு தானுகவே சீர்திருந்தும். ஆகவே அதற்காகச் சட்டமறுப்பையோ குழப்பத்தையோ ஏற்படுத்துவது நீதியாகாது. அபிப்பிராயங்கள் சுதந்திரமாகவும், உரிமைகள் சமமாகவும் உள்ள போது குழப்பம் அவசியமாகாது.

சம உரிமைத் தத்துவத்தைப் புரட்சியின் அஸ்திவாரமாகக் கொள்வோம்; முடிவாக அரசாங்கத்தின் அஸ்திவாரமாகவும் கொள்வோம். அப்பொழுது அரசாங்கத்

தில் பல பிரிவுகள் எப்படி அமைக்கப்படவேண்டும் என்பது அபிப்பிராயத்தின் பாற்படும்.

இம்மாதிரியான ஒரு பிரச்னையைக் குறித்துப் பல மார்க்கங்கள் தோற்றமளிக்கும். அவற்றுள் மிகவும் மேலானது எது என்பதை நிர்ணயிக்க அனுபவம் இன்னமும் தேவை. ஆனால் எது கீழ்த்தரமானது என்பதை அனுபவம் போதிய அளவிற்கு நிர்ணயித்துவிட்டது. ஒரு மனிதனின் ஆவலுக்கும் திரிபிற்கும் உட்படும் முடிவுகளும் ஆலோசனைகளும் கீழ்த்தரமானவை. சட்டநிரூபண சபை முழுமையும் ஒரே அங்கமாகக் கூட்டப்பட்டால், மொத்தத்தில் அது ஒரு தனி மனிதனாகிறது. ஆலோசனை செய்யவேண்டிய எல்லா விஷயங்களிலும் ரீஸர்வ் பிரிவினர்களை வைத்திருப்பது அவசியம். பிரதிநிதிகளை இரு பகுதிகளாகப் பிரித்து அவர்களுக்குள் பரிசீலனை செய்து ஒருவரையொருவர் திருத்திக் கொள்வது, அனைவரும் ஒன்றாக அமர்ந்து ஒரேயடியாக விவாதிப்பதைவிட மேலானது.

பிரதிநிதித்துவ அரசாங்கம் ஒரே உருவில் இருப்பதில்லை. அது அமைக்கப்படும் எல்லா உருவங்களுக்கும் தத்துவம் என்னவோ ஒன்றேதான். இவையெல்லாம் கிளம்பும் ஆணிவேர் மக்களின் சம உரிமை. அதன் கிளைகள் தற்கால அபிப்பிராயப்படியோ அல்லது எதிர்கால அனுபவம் நன்கு செலுத்துகிறபடியோ அமைக்கப்படலாம். ஆங்கிலப் பிரபுக்கள் சபையை எடுத்துக் கொள்வோம். செஸ்டர் பீல்ட் அதைச் 'சொஸ்தமடையாதவர்களின் ஆஸ்பத்திரி' என்று அழைக்கிறார். லஞ்சத்திலிருந்து உயரும் ஒரு வளர்ச்சியே அச்சபை. இந்தப் பிரபுக்களின் சபைக்கும், மனித உரிமைகளிலிருந்து பிறக்கும்

லெஜிஸ்லேடிவ்களின் கிளைக்கும் இருக்கும் சம்பந்தமோ அல்லது உரிமையோ, மனித உடலின் ஓர் அங்கத்திற்நம் ரணமான பருவிற்கும் இடையே உள்ளதைவிட அதிகமில்லை.

'நிர்வாகம்' எனப்படும் அரசாங்கப் பகுதியைப் பொறுத்தவரையில், முதலில் அச்சொல்லின் சரியான பொருள் என்ன என்பதைக் குறிக்கவேண்டும்.

அதிகாரம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. முதலாவது சட்டங்களை உண்டாக்குவது; இரண்டாவது அவற்றைச் செலுத்துவது அல்லது பழக்கத்தில் அவற்றை நடத்துவது. முந்தியது மனித உள்ளத்தின் பகுத்தறிவுள்ள மனோசக்திக்கு நிகரானது. அதுவே காரணத்தைப் பின்பற்றி என்ன செய்யப்படவேண்டும் என்பதை நிர்ணயிக்கிறது. இரண்டாவது மனித உடலின் யந்திர சக்திக்கு நிகரானது. அது தீர்மானத்தை வழக்கத்தில் செலுத்துகிறது. முந்தியது தீர்மானித்து, பிந்தியது நடத்தா விட்டால் பலவீனமான ஒரு நிலைமை ஏற்பட்டுப் போகிறது. பிந்தியது முந்தியதை அனுசரிக்காமல் நடந்தால் அது பைத்தியக்காரத்தனமான ஒரு நிலைமையாகி விடுகிறது. நிர்வாக இலாகா உத்தியோக சம்பந்தமானது; சட்ட நிரூபண சபையின் அதிகாரத்திற்கு அடங்கியது. தேக சௌக்யத்தில் உடல் எப்படி மனத்திற்கு அடங்கியதோ அதைப் போல்தான். தீர்மானிக்க ஓர் அரசு, நிர்வகிக்க ஓர் அரசு என்று இரு அரசுகளைப் பற்றி நினைப்பது முடியாது. அது நடக்குமா, நடவாதா என்று சீர்தூக்கும் அதிகாரம் நிர்வாகியிடம் கொடுக்கப் படவில்லை. அவ்விஷயத்தில் அனுமானித்து அதிகாரம் செலுத்தவும் முடியாது. நிர்வாகி சட்டங்கள் விதிப்

பதையன்றி வேறு எதுவும் செய்யமுடியாது. அவைகளுக்கு ஏற்பவே நடந்தாக வேண்டும். இம்மாதிரியான ஓர் அபிப்பிராயத்தில், நிர்வாகி, சட்டப் பிரயோகத்தை நடத்தும் எல்லா உத்தியோக இலாகாக்களாலும் உண்டாக்கப்படுகிறார். அத்தகைய இலாகாக்களில் முக்கியமானது 'நீதி இலாகாவே.'

சட்டங்களின் பிரயோகத்தைக் கண்காணித்துக் கொள்ளவும், அவை நேர்மையாகச் செலுத்தப்படுவதைக் கவனித்துக் கொள்ளும் பொருட்டும் ஏதேனும் ஒருவிதமான அதிகாரி வேண்டும் என்ற எண்ணம் மனித சமூகத்தால் கருதப்பட்டு வருகிறது. இந்த மேற்பார்வை அதிகாரத்தை, நிர்வாக அதிகாரப் பிரயோகத்துடன் குழப்பிக் கொள்வதாலேயே 'நிர்வாக அதிகாரம்' என்பதைப்பற்றி நாம் நினைக்கிறோம். அமெரிக்க ஐக்ய நாடுகளில், அரசாங்கத்தின் எல்லாப் பகுதிகளிலும் 'நிர்வாகி' என்று அழைக்கப்படுபவர் சட்டப் பிரயோகத்தை மேற்பார்க்கும் அதிகாரியேயன்றி வேறெவருமல்ல. சட்ட நிரூபண சபைகள் இயற்றிய சட்டங்களின் மூலமாகவே அவர்கள் அச்சபையை அறிவார்கள். சட்ட நிரூபண சபையால் எவ்வழியிலும் கட்டுப்படுத்தப்பட்டோ, உத்தரவிற்குட்பட்டோ அவர்கள் இருப்பதில்லை. அவர்கள் சட்ட நிரூபணத்தை விட்டுத் தனியாக சுதந்திரமாக இருப்பவர்கள்.

இந்த மேற்பார்வை அதிகாரி எப்படி ஏற்படுத்தப்பட வேண்டும், எப்படி நியமிக்கப்பட வேண்டும் என்பது அபிப்பிராய சம்பந்தப்பட்டது. சிலர் ஒரு மார்க்கத்தை விரும்பலாம், வேறு சிலர் பிறிதொரு மார்க்கத்தை விரும்பலாம். தத்துவம் சம்பந்தப்படாமல் அபிப்பிராயம் சம்பந்தப்படும் எந்த விஷயங்களிலும் பெருவாரியான அபிப்

பிராயமே எல்லோருடை 'விதி' (Rule) யாகிறது. இருந்தாலும், காரணத்தின் மூலமாக அனுமானிக்கும் சில விஷயங்கள் உண்டு. அவை அனுபவத்தால் நிரூபிக்கப்பட்டவை. அவை அவ்விஷயமாக நமது அப்பிராயத்தை செலுத்த உதவுகின்றன. இதில் ஓர் அபிப்பிராயம் 'எப்பொழுதுமே ஒருவனுக்கு மிகவும் மேலான அதிகாரங்களை அளிக்கலாகாது' என்பதே. ஏனென்றால் அப்படி மேலான அதிகாரங்களைப் பெற்றவர் அவற்றைத் துஷ்பிரயோகம் செய்யவே சபலப்படுவார். உத்தியோகப் போட்டியையும் குழப்பத்தையும் அது மூட்டிவிடும். இரண்டாவது அபிப்பிராயம் நீண்டகாலத்திற்கு ஒருவரிடம் அதிகாரத்தை விட்டுவைக்கலாகாது என்பதே. நீண்ட காலம் அதிகாரம் ஒருவரிடமே நீடிப்பதின் அபாயத்தைக் காட்டிலும் அடிக்கடி அதிகாரிகளின் மாற்றத்தால் ஏற்படுவதாகக் கருதப்படும் அசௌகரியம் குறைவானது.

சுதந்திரத்தைப் பாதுகாப்பதன் மார்க்கங்களைப்பற்றி சில விஷயங்களைக் கூறிவிட்டு இந்த விவாதத்தை நான் முடித்துக்கொள்ளுகிறேன். சுதந்திரத்தை ஸ்தாபிப்பது மட்டும் அவசியமானதாகாது. அதை நாம் பாதுகாப்பதும் அவசியமாகும்.

முதலாவதாக, சுதந்திரத்தை ஸ்தாபிக்கும் வழியை ஏற்படுத்தும்பொருட்டு, கொடுங்கோலாட்சியைத் தூக்கி யெறிய உபயோகப்படுத்தப்படும் வழிகளுக்கும், கொடுங்கோன்மை தூக்கி எறியப்பட்டபின் உபயோகப்படுத்தப்படவேண்டிய வழிகளுக்கு மிடையே உள்ள வித்தியாசத்தை அறிவது அவசியமாகும்.

முதலாவது விஷயத்தில் உபயோகப்படுத்தப்பட்ட சாதனம் அவசியமானதாகையால் நேர்மையானதாகக்

கொள்ளப்படுகிறது. அச்சாதனங்களே மீட்சிகள் எனப்படுபவை. ஸ்தாபகமான கொடுங்கோலாட்சி தொடர்ந்து நிகழும் எந்நாட்டிலும் வேறு சாதனங்களைப் பிரயோகிப்பதென்பது இயலாத காரியம். புரட்சியின் ஆரம்பத்தில் புரட்சியில் ஈடுபட்டோர் தங்கள் இஷ்டப்படியெல்லாம் அதிகாரம் செலுத்துவார்கள் என்பது நிச்சயம். இந்த இஷ்ட அதிகாரம் சமய சந்தர்ப்பங்களுக்கு ஏற்பச் செலுத்தப்படும். அதற்கு எவ்விதக் கொள்கையும் கிடையாது. இந்த இஷ்ட அதிகாரம் மாமூலாகச் செலுத்தப்பட்டால் சுதந்திரம் ஸ்தாபிதம் ஆகாது; அப்படி ஒருவேளை ஸ்தாபிக்கப்பட்டாலும் தூக்கி எறியப்பட்டுவிடும். ஒரு புரட்சியில் ஒவ்வொரு மனிதனும் தன் அபிப்பிராயத்தை ஒரே சமயத்தில் மாற்றிக்கொண்டு விடுவான் என்று எதிர்பார்க்க முடியாது. திடீரென்று எல்லோருமே நம்பிய உண்மையோ தத்துவமோ எதுவும் கிடையாது. அம்மாதிரியான உண்மையோ தத்துவமோ நமக்குத் தெரியாமல் இருந்ததில்லை. காலமும் காரணமும் ஒத்துழைக்க வேண்டும். அவற்றின் ஒத்துழைப்பு எக்கொள்கைக்கும் முடிவான ஸ்தாபிதத்தை உண்டாக்க வேண்டும். ஆரம்பத்திலேயே நம்பிக்கை கொண்டவர்கள் பிறர்மீது ஆதிக்கம் செலுத்த உரிமை கிடையாது. பிறருக்கு மெல்ல மெல்லப் பரவலாம் அந்நம்பிக்கை. புரட்சிகளின் தார்மீகத் தத்துவம், போதனையே தவிர நிர்மூலமல்ல.

இரண்டு வருஷங்களுக்கு முன்பாகவே ஓர் அரசியல் ஸ்தாபிக்கப்பட்டிருந்தால், பிரான்ஸைப் பாழாக்கிய அட்டூழியங்களைத் தடுத்திருக்கலாம். அந்த அட்டூழியங்கள் புரட்சியின் பான்மையைப் பாதித்துவிட்டன. இது என் அபிப்பிராயம்: அரசியல் ஸ்தாபிக்கப்பட்டிருந்தால்

ஒற்றுமை ஏற்பட்டுவிட்டிருக்கும். ஒவ்வொருவனும் தான் நடக்கவேண்டிய முறைமையை அறிந்துகொண்டிருப்பான். அதற்குப் பதிலாக இருந்தது புரட்சிகரமான அரசாங்கம். அதிகாரமும் கொள்கையுமற்ற அரசாங்கம் அது. குற்றங்களும் குறைதிசயங்களும் தற்செயலாகவே நேரிட்டன. ஒருநாள் தேசபக்தியாக இருந்தது மறுநாள் தேசத்துரோகமாக மாறிற்று. ஓர் அரசாங்கம் இல்லாமலிருந்ததாலேயே இவைகள் அனைத்தும் ஏற்பட்டன. ஒரு கட்சியின் அதிகாரத்தையும் போக்கையும் கட்டுப்படுத்தி வரையறுக்கும் பொதுக் கொள்கையை ஸ்தாபிப்பதன் மூலமாக, அக் கட்சியின் எதேச்சாதிகார ஆட்சியைத் தடுப்பதே அரசாங்கத்தின் அபிப்பிராயம். அதே கொள்கை தான் எல்லாக் கட்சிகளுக்கும் பிரயோகப்படுவது. 'நீங்கள் இதுவரையில் தான் செல்லலாம், அதற்குமேல் செல்லக்கூடாது' என்று கூறுகிறது அக்கொள்கை. அரசாங்கம் இல்லாத பொழுது கட்சியையே பூர்ணமாக எதிர்பார்க்கிறார்கள் பொதுமக்கள். தத்துவம் கட்சியை அரசுபுரிவதற்குப் பதிலாக, கட்சி தத்துவத்தை அரசு புரியத் துவங்கிவிடுகிறது. தண்டிக்க வேண்டும் என்ற ஆசை எப்பொழுதுமே சுதந்திரத்திற்கு ஆபத்தானது. அந்த ஆசை உன்னத சட்டங்களையும் திரித்துத் தவறுதலாகப் பிரயோகிக்கும்படி மனிதர்களைச் செலுத்துகிறது. தன் சுதந்திரத்தைப் பாதுகாப்பவன் எதிரிக்கு இன்னல் விளைவதையும் தடுக்கவேண்டும். இக்கடமையிலிருந்து அவன் தவறுவானானல், தனக்கே கெடுதி ஏற்பட ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொண்டு விடுகிறான்.

2 சமூகமும் நாகரிகமும்

மனித சமூகத்தில் நிலவும் அமைதி பெரும்பாலும் அரசியலின் விளைவு அல்ல. அதன் உற்பத்தி சமூகத்தின் கொள்கைகளிலும், இயற்கையான மனிதக் கட்டுப் பாட்டிலுமே இருக்கிறது. அரசாங்கம் ஏற்படு முன்பாக வும் அது அப்படித்தான் இருந்தது. அரசாங்கம் அழிந் தாலும் அது அப்படியே இருக்கும். ஒரு மனிதனுக்கு மற்றவரின்மீது ஒத்துழைப்பான பொறுப்பும் உற்சாக மும் உண்டு. நாகரிக ஜாதியினரும் அப்படியே ஒருவருக் கொருவர் பிணைக்கப்பட்டு வாழ்கின்றனர். இதுவே பெருத்த இணைப்புச் சங்கிலியாகி எல்லோரையும் ஒன்று கூட்டி வைத்திருக்கிறது. நிலச்சுவான்தார், குடியானவர், தொழிலாளி, வியாபாரி, விற்பனையாளர், வேறு எத் துறையில் இருப்பவர்களாயினும் சுபீட்சமாக வாழ்வது ஒருவர் மற்றொருவருக்கு உதவி செய்து கொள்வ தாலேயே. பொதுவான உற்சாகம் அவர்களது நிலையங் களைச் செலுத்துகிறது. அதுவே அவர்களது சட்ட மாகவும் அமைந்துவிடுகிறது. பொதுவான வழக்கம் உண்டாக்கும் இச்சட்டங்கள், அரசாங்கத்துச் சட்டங் களைவிட மேலான ஆதிக்கம் கொண்டுள்ளன. முடிவாகக் கூறப்போனால் சமூகமே அரசியலுக்குச் சம்பந்தப்பட்ட எதனையும் செய்கிறது.

மனிதனுக்குத் தகுதியான அரசியலின் தன்மையையும், அளவையும் அறியவேண்டுமானால் அவன் குணநிசயத்தை அறிவது அவசியமாகும். இயற்கை சமூக வாழ்விற்காக அவனைச் சிருஷ்டித்தது. அது விரும்பிய இடத்திற்கு அவனைத் தகுதியாக்குகிறது. எல்லா விஷயங்களிலும்

இயற்கையான தேவைகளைத் தனியநிகாரத்தைவிட அதிகப்படுத்திற்று. சமூகத்தின் உதவியின்றி எம் மனிதனும் தன் தேவைகளைத் தருவித்துக்கொள்ள முடியாது. அத்தகைய தேவைகள் ஒவ்வொருவனுக்கும் உண்டு. அதுவே அவர்கள் எல்லோரையும் சமூகமாகப் பிணைக்கிறது; ஒரு நடுநிலையத்தில் இயற்கையாக ஆகர்ஷணம் கிரகிப்பதைப்போல அவர்களைப் பிணைத்து விடுகிறது.

இயற்கை இன்னமும் அதிகமாக வேலை செய்திருக்கிறது. தேவைகளின் போராட்டத்தை அதிகப்படுத்திற்று. ஒவ்வொருவரின் ஒத்துழைப்பாலேயே அவற்றைத் தரமுடியும் என்ற நிலையை ஏற்படுத்திற்று. அதன்மூலமாக மனிதனைச் 'சமூகமாக' ஐக்கியப்படுத்திவிட்டது. மனிதனிடையே சமூகப்பிரியத் துறையை உண்டாக்கிற்று. மனித வாழ்விற்கு அந்த அன்புத்துறை தேவையானதல்ல; ஆயினும் மனிதனின் உவகைக்கு அது அவசியம். அன்பு, வேலை செய்யாமல் சமூகத்தின் எப்பகுதியிலும் தயங்கி நின்றது கிடையாது. ஜீவனுடனேயே பிறந்து அத்துடனேயே போகிறது அது.

மனிதனின் அமைப்பையும், அவன் தேவைகளின் பல திறப்பட்ட தன்மைகளையும், வெவ்வேறு தரமான மனிதர்களின் திறமை பிறர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதால் அவர்கள் சௌஜன்யமாக வாழ்வதையும், சமூகத்தில் மனிதனின் முன்னேற்றத்தையும், இவற்றின் மூலமாக ஏற்படும் நன்மைகளைப் பாதுகாப்பதையும் நாம் கவனத்துடன் பரிசிலனை செய்வோமானால், அரசாங்கம் எனப்படுவது வெற்றுச் சுமையே என்பதை லகுவில் காண்போம்.

நாகரிகமும் சமூகமும் சௌகரியமாகத் தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலாத சில விஷயங்களில் மட்டுமே அரசாங்கம் தேவையாகிறது. அத்துடன் அரசாங்கம் உபயோகமானதாகச் சேர்க்கும் ஒவ்வொன்றும் சமூகத்தின் பொதுவான ஆமோதிப்புடன் செய்யப்பட்டதே என்பதைக் காட்டப் போதுமான உதாரணங்கள் இருக்கின்றன.

அமெரிக்க யுத்த துவக்கத்திலிருந்து இரண்டு வருஷங்களுக்கு மேலாக, நீண்டகாலம் வரையில் பல அமெரிக்க நாடுகளில் ஸ்தாபனமான அரசாங்கமே கிடையாது. பழைய அரசாங்கங்களோ எடுபட்டுவிட்டன. தேசமே புதிய அரசாங்கங்களை ஸ்தாபிப்பதில் ஈடுபட்டிருந்தது. இருந்தபோதிலும் இவ்விடைக் காலத்தில் அமைதியும் ஒத்துழைப்பும் பாதுகாக்கப்பட்டன. அம்மாதிரி வேறு எந்த ஐரோப்பிய தேசத்திலும் அமைதி பாதுகாக்கப்பட்டதில்லை. மனிதனிடம் இயற்கையான பொருத்தம் இருக்கிறது. அது சமூகத்திடம் அதிகமாக இருக்கிறது; ஏனென்றால் சமூகம் பலதிறப்பட்ட சாமர்த்தியங்களைத் தன்னுள் கொண்டுள்ளது; தானிருக்கும் எந்நிலைமைக்கும் தன்னைத் தகுதியாகச் செய்து கொள்ளுகிறது. வழக்கமான அரசாங்கம் எடுபட்டுவிட்டால் உடனே சமூகம் வேலை செய்ய ஆரம்பிக்கும். பொதுவான பிணைப்பு நேரிடும். பொது உற்சாகம் பொதுவான பாதுகாப்பை அளிக்கும்.

வழக்கமான அரசாங்கத்தை அழிப்பது சமூகத்தையே குலைப்பதாகும் என்று சொல்லப்படுகிறது. இது உண்மையல்ல. நடப்பதென்னவோ எதிர்மாருனது. எதிரான உணர்ச்சிகள் வேலை செய்து சமூகத்தை அர

சாங்கத்துடன் பிணைத்துவிடுகின்றன. அரசாங்கத்திற்கென்று முன்பு ஒதுக்கப்பட்ட பகுதி தனக்காகவே உழைக்க ஆரம்பிக்கிறது. அப்பகுதியின் மூலமாக வேலை செய்யத் துவங்குகிறது சமூகம். மனிதர்கள் இயற்கையாகவே பிரதிபலன் கருதி ஒத்துழைப்பதுண்டு. மனிதர்கள் நாகரிகமான சமூக வாழ்விற்குத் தங்களைப் பழக்கப்படுத்திக் கொள்ளும்பொழுது, பழக்கத்தில் காணும் தத்துவங்களைத் தேவையான மாறுதல்களுக்கோ அல்லது தங்கள் அரசாங்கத்தை ஸ்தாபிக்கவோ பயன்படுத்துவார்கள். மனிதன் சமூகத்தின் சிருஷ்டி. அவனைச் சமூகத்தை விட்டு விலக்குவது அசாத்தியம்.

வழக்கமான அரசாங்கம் நாகரிக வாழ்வின் ஒரு பகுதியை மட்டுமே உண்டாக்குகிறது. உயர்ந்த மனித அறிவினால் ஏற்படுத்தப்படுவது ஸ்தாபனமாகி விட்டாலும்கூட, அது கருத்திலும் பெயரிலும் உயர்ந்த பொருளே யாகுமேயன்றி யதார்த்தமானதாகாது. மனிதனின் சௌக்யமும் முன்னேற்றமும் தனியாகவோ அல்லது ஒரு தொகுதியாகவோ கீழ்க்கண்டவைகளின் பாற்படும். நன்கு நிர்மாணிக்கப்பட்ட அரசாங்கம் இயற்றக்கூடியதைவிட இவை மேலானவை. அவைகளாவன :

சமூகம், நாகரிகம் ஆகியவற்றின் பெருத்த அஸ்திவாரமான தத்துவங்கள்.

உலகமே அங்கீகரித்து அன்னியோன்னியமாகவும் சௌஜன்யமாகவும் ஒப்புக்கொண்டுள்ள பொதுவழக்கம்.

லக்ஷக் கணக்கான துறைகளினூடே சென்று நாகரிக மக்களின் முழுத்தொகுதியை உற்சாகமூட்டி விடும் தொடர்ச்சியான உற்சாகத்தின் சுழல்.

நாகரிகம் எவ்வளவுக் கெவ்வளவு பூர்ணமானதோ அவ்வளவுக்கவ்வளவு அரசாங்கம் தேவையாகவுள்ள சந்தர்ப்பங்கள் குறைவாகும். ஏனென்ருல் நாகரிகமே தன் அலுவல்களைச் சீர்திருத்திக்கொண்டு சுயமாகவே தன்னை ஆட்சி புரிந்து கொள்ளுகிறது. ஆனுல் இவ் விஷயத்தில் பழங்கால அரசாங்கங்களின் வழக்கமே முரண்பாடாக இருந்திருக்கிறது. செலவு குறைவாகப் படவேண்டிய விகிதத்தில் ஏறிவிட்டிருக்கிறது. நாகரிக வாழ்வில் ஒரு சில பொதுவான சட்டங்களே தேவை. அச்சட்டங்களும் பொதுவான நன்மையைப் பயப்பன வாகவே இருத்தல் வேண்டும். அவை எந்த அரசாங் கத்தில் பிரயோகிக்கப்பட்டாலும் அதன் விளைவு ஏறக் குறைய ஒன்ருகவே இருக்கும். மனிதர்களைச் சமூக மாக்கும் தத்துவங்கள் யாவை? சமூக மாக்கிய பின்னர் அவர்களது அன்னியோன்னியப் போக்கைச் சீர்திருத்தும் கருத்துக்கள் யாவை? என்பதை நாம் ஆலோசிப்போ மாளுல், அரசாங்கம் எனப்படுவதை எட்டு முன்பாகவே ஒருவர் மற்ருெருவருக்காகச் செய்யும் காரியங்களின் இயற்கைப் போக்காலேயே முழு விவகாரங்களும் நிகழு கின்றன என்பதைக் காண்போம்.

இந்த எல்லா விஷயங்களிலும் மனிதன் தகுதியான ஜீவன். அதை அவனே அறியமாட்டான். அரசாங்கங் களின் விருப்பத்திற்கு, தகுதியைவிட மேலான ஜீவன் மனிதன். சமூகத்தின் பிரம்மாண்டமான சட்டங்கள் அனைத்தும் இயற்கையின் சட்டங்களே. வியாபாரச் சட்டங்களைப் பொறுத்தவரையில்—மனிதர்களுக்குள்ளா கவோ அல்லது தேசங்களுக்குள்ளாகவோ ஏற்படும் உறவாயிருந்தாலும் — அவை அன்னியோன்னியமான

சௌஜன்ய உற்சாகத்தின்பாற்பட்ட சட்டங்களே. அச்சட்டங்கள் பின்பற்றப்படுகின்றன. அவற்றிற்குக் கீழ்ப்படிந்து நடக்கிறார்கள். சம்பந்தப்பட்ட ஒரு சாரார் தங்கள் அக்கறைக்காகவே அப்படி நடக்கின்றனர்; அரசாங்கத்தின் சட்டங்களைப் பின்பற்ற வேண்டும் என்ற கருத்தாலல்ல.

ஆனால் அரசாங்கத்தின் வேலைகள் எவ்வளவோ முறைகளில் சமூகத்தின் குணத்தைச் சீர்குலைக்கின்றன! அழிக்கவும் அழிகின்றன! அரசாங்கம் சமூகத் தத்துவங்களுடன் இணைக்கப்படுவதற்குப் பதிலாக, தானாகவே அதிகாரத்தைக்கொண்டு, கொடுமை புரிந்து தாட்சண்யமோ பாரபட்சமோ காட்டி வருமானால், அரசாங்கமே தீமைகளின் காரணமாகிறது. தீமைகளைத் தடுக்கவேண்டிய அரசாங்கமே தீமைகளை விளைவிக்கிறது.

இங்கிலாந்தில் வெவ்வேறு காலங்களில் நேர்ந்த கலகங்களையும் குழப்பங்களையும் பார்ப்போமானால், அரசாங்கம் வேண்டும் என்ற தேவையால் அவை நேரிடவில்லை என்பதைக் காண்போம். ஆனால் அக்கலகங்களின் காரணங்களை உண்டாக்கியது அரசாங்கமே. சமூகத்தைப் பிணைப்பதைவிட்டு அதைப் பிரித்தது அரசாங்கம். இயற்கையின் ஐக்கியத்தைச் சமூகத்திலிருந்து பிரித்தது; மற்றப்படி நேரிட்டிருக்க முடியாத கேவலங்களை வளர்த்தது. வியாபார விஷயமாகவோ அல்லது ராஜீய சம்பந்தமற்ற வேறெந்த விஷயமாகவோ பொதுவாக ஏற்படுத்தப்பட்டு சமூகத் தத்துவங்களின்மீது நிகழும் கூட்டுறவுகளில், இயற்கையாகவே பல திறப்பட்ட கட்சியினர் எப்படி ஒன்று கூடுகிறார்கள் என்பதை நாம் காண்

கிறேம். அரசாங்கங்கள் அமைதியின் பாதுகாப்பாக இருப்பதை விட்டுவிட்டு, சில சமயங்களில் அமைதியையே அழித்துவிடுகின்றன. 1780 ம் வருஷத்திய கலகங்களின் ஆரம்பம், அரசாங்கம் ஊட்டிய தப்பெண்ணங்களின் விளைவே. இங்கிலாந்தைப் பொறுத்தவரையில் இதைத் தவிர வேறு காரணமே கிடையாது.

அதிக வரி அல்லது சமமற்ற வரி எவ்வளவு திரித்து விதிக்கப்பட்டாலும், ஏதேனும் விளைவுகளை உண்டாக்கத் தவறியதில்லை. அதனால் பெருத்த தொகுதியினரிடையே மனக்கசப்பும் பஞ்சமும் ஏற்படுகிறது. அவர்கள் எப்பொழுதும் கலகத்தின் வரம்பிலேயே நிற்கின்றனர். துரதிருஷ்டவசமாக, விஷயங்களை அறிவதிலிருந்து அவர்கள் தடுக்கப்படுவதால், கோபாவேசத்தால் அவர்கள் திரண்டெழுகின்றனர். கலகங்களின் வெளிப்படையான காரணம் எதுவானாலும், சந்தோஷத்தின் தேவையே பிரதான காரணமாகும். அரசாங்க முறையில் ஏதோ தவறு இருப்பதை அது காட்டுகிறது. அத்தவறு சமூகம் பிணைக்கப்பட்டுப் பாதுகாக்கப்படுவதைச் சிதைக்கிறது.


உண்மையே காரண ஆராய்ச்சியைவிட மேலானது. இக்குறிப்பை அமெரிக்க உதாரணம் நிலை நாட்டுகிறது. பொதுவான நிர்ணயப்படி ஒற்றுமையை எதிர்பார்க்க முடியாத தேசம் அமெரிக்காதான். பல தேசங்களிலிருந்து வந்த பலதிறப்பட்ட மக்களைக் கொண்டது அத்தேசம். அவர்கள் பலதிறப்பட்ட பழக்க வழக்கங்களுக்கும் அரசியல் முறைகளுக்கும் வழக்கமானவர்கள்; பல வேறான பாஷைகளைப் பேசுபவர்கள்; வெவ்வேறு விதமாகக் கடவுளைத் தொழுபவர்கள். அத்தகைய மக்களிடையே ஒற்றுமை சாத்தியமல்ல என்று புலப்படும்.

சமூகத் தத்துவம், மனித உரிமைத் தத்துவம் ஆகியவற்றின்மீது அரசாங்கத்தை அமைப்பதால் எக்கஷ்டமும் ஓடிவிடுகிறது. எல்லாப் பகுதிகளும் அன்னியோன்னியத்துடன் இணைக்கப்பட்டு விடுகின்றன. அங்கு ஏழைகள் அவதிப்படுவதில்லை. தனவந்தர்களுக்குத் தனி உரிமை கிடையாது. நீதி நிலையப் புரட்சியின் ஆடம்பரத்தில் கைத்தொழில் பாதிக்கப்படுவதில்லை. அவர்கள் செலுத்தும் வரிகளும் சொற்பம். அதற்குக் காரணம் நேர்மையான அரசாங்கம். அவர்களுக்குச் சலிப்பையுண்டாக்கக் கூடியது எதுவுமே கிடையாது. ஆகவே கஷ்டங்களையோ கலகங்களையோ வளர்க்க மார்க்கமே கிடையாது.

திரு. பர்க் ஒரு மானசிக சாஸ்திரி. அத்தகைய மக்களை எப்படி ஆள்வது என்பதைக் கண்டுபிடிக்க அவர் மிகவும் கஷ்டப்பட்டிருக்க வேண்டும். சிலரைச் சூதின்மூலமாகவும், சிலரைப் பலாத்காரத்தினாலும், எல்லோரையும் ஏதேனும் சாதனத்தாலும் நிர்வகிக்கலாம் என்று அவர் யோசித்திருப்பார். கயவர்களை வசிகரிக்கவும், அறியாதவர்களை வசப்படுத்தவும், அவர் மூளையே தேவை. ஆராய்ச்சிகளில் தன்னையும் மறந்து, பல விதங்களில் யோசித்து முடிவில் தன்னெதிரிலே கிடந்த லகுவான தடங்கலற்ற பாதையையும் புறக்கணித்திருக்கவேண்டும். அமெரிக்கப் புரட்சியால் பல சாதகங்கள் ஏற்பட்டன. அவற்றுள் மகத்தானது அது தத்துவங்களைக் கண்டுபிடிக்கும்படி செய்ததே. அரசாங்கங்களின் மோசத்தை வெளிக்காட்டியதும் அதுவே. அமெரிக்கப் புரட்சிக்கு முன்பு, ஒரு நிதிஸ்தலத்தின் போக்கிற்குள்ளாகவே புரட்சிகள் நடந்தன. தேசத்தின் பெருத்த நிலப்பரப்பில் அதற்கு முன் எப்புரட்சியும் நிகழவில்லை. கனவான்

களின் தொகுதியினரே புரட்சியில் எதிர்க்கட்சியினராக இருந்தனர். சீர்திருத்தத்திற்காகச் சினந்தெழுந்தாலும், தங்கள் தொழிலின் வஞ்சகத்தை ஜாக்ரதையாகப் பாதுகாத்தனர். அரசாங்கத்தை மர்மங்களால் சிருஷ்டிக்கப்பட்ட பொருளாகப் பொதுமக்களுக்குக் காட்ட எல்லா விஷயங்களிலும் ஜாக்கிரதையாக இருந்தனர். அம்மர்மத்தை அக்கட்சியினர் மட்டுமே அறிந்திருந்தனர். சாதகமான அந்த உண்மையைத் தேசம் உணர்வதிலிருந்து தடுத்தனர்.

"அரசு, சமூகத் தத்துவத்தின்மீது இயங்கும் தேசியக் கூட்டுறவே யன்றி வேறல்ல"—என்பதே அவ்வுண்மை.



விலை ரூபாய் மூன்று

WRAPPER PRINTED AT JOTHI PRESS, MADRAS 5.